# குளச்சல் நகராட்சி

குளச்சல் நகராட்சி மன்றத்தின் ஜுலை மாத அவசரக்கூட்டம் 22.07.2021 ஆம் தேதி பிற்பகல் 4.00 மணிக்கு நடைபெற்றது.

**பொருள் எண்.1**

இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில், திடக்கழிவு மேலாண்மை பணிகளின் பயன்பாட்டிற்காக, தூய்மை இந்தியா இயக்கம் 2018-19-ன் கீழ், ரூ.21.60 இலட்சம் மதிப்பீட்டில், கொள்முதல் செய்யப்பட்ட 12 எண்ணம் மின்கலத்தில் இயங்கும் வாகனங்களில் வருடாந்திர பராமரிப்பு பணிகளை பொறியியல் பிரிவின் மூலம் மேற்கொள்வதற்கு, நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநரின் சுற்றறிக்கை ந.க.எண்.1460/2020/ஆ2 நாள் 11.09.2020-ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில், மேற்படி 12 எண்ணம் வாகனங்களில், தற்போது பயன்பாட்டில் உள்ள 5 எண்ணம் வாகனங்கள் போக மீதம் 7 எண்ணம் வாகனங்களில், Motor , Battery, Wiring மற்றும் Controller பழுதடைந்துள்ளதால், வாகனத்தை இயக்க இயலாமல் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. இதனால் குறுகலான தெருக்களில் உள்ள வீடுகளில், குப்பைகளை தரம் பிரித்து வாங்கும் பணிகளில் தொய்வு ஏற்பட்டுள்ளது. எனவே 12 எண்ணம் வாகனங்களிலும் வருடாந்திர பராமரிப்பு பணிகளை ஒப்பந்த முறையில் மேற்கொள்வதற்கு ஏதுவாக, பழுதடைந்த நிலையில் உள்ள 7 எண்ணம் வாகனங்களில் பராமரிப்பு பணிகளை மேற்கொள்வதற்காக தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.7,45,000/-க்கும், மேற்படி பணியினை நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்வதற்கும் மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.1005/2021/இ1

**தீர்மானம் எண்.2539 அனுமதிக்கப்படுகிறது**

**பொருள் எண்.2**

இந்நகராட்சிக்கு சொந்தமான காமராஜர் பேருந்து நிலைய கடை எண்கள்.13,14,18,22,36,37,39 கலைஞர் கருணாநிதி வணிகவளாக கடை எண்கள் 33 முதல் 40,47 முதல் 52, 57 முதல் 64 கவியரசு கண்ணதாசன் வணிக வளாக கடை எண்கள்.25,32 மற்றும் நவீன மீன்சந்தை தரைதளம் கடை எண்கள் 3,4,7 முதல் தளம் கடை எண்கள் 1,7 ஆகிய கடைகளுக்கு 07.07.2021 புதன் கிழமை அன்று பொது ஏலம் நடைபெற்றது. பொது ஏலத்தில் கலந்து கொண்டவர்கள் விவரம் பின்வருமாறு,

**நவீன மீன்சந்தை முதல் தளம் கடை எண்.7**

| வ. எண் | ஏலத்தாரர் பெயர் | கேட்கப்பட்டுள்ள ஏலக்கேள்வி (மாதம் 1/-க்கு) ஜி.எஸ்.டி தவிர | உயர்ந்தபட்ச ஏலக்கேள்வி மற்றும் ஏலத்தாரர் பெயர் |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 1 | P.ஆஷிகா | 6000/- | 6000/- (P.ஆஷிகா) |

மேற்படி கடைக்கு ஒப்பந்தப்புள்ளி எவரும் அளிக்கவில்லை. நவீன மீன்சந்தை முதல் தளம் கடை எண்.7-க்கு ஒரே ஒரு நபர் மட்டுமே கலந்து கொண்டார். இந்த கடைக்கு 07.07.2021-ல் 12-வது ஏலம் ஆகும். கடைக்கு உயர்ந்தபட்ச ஏலக்கேள்வியாக செல்வி. P.ஆஷிகா என்பவர் மாதம் வாடகை ரூ.6000/-க்கு கேட்டுள்ளார்.

கலம் (4)-ல் கொடுக்கப்பட்டுள்ள ஏலக்கேள்வியை மன்றத்தின் பார்வைக்கும், ஏலம் போகாத காமராஜர் பேருந்து நிலைய கடை எண்கள்.13,14,18,22,36,37,39 கலைஞர் கருணாநிதி வணிகவளாக கடை எண்கள் 33 முதல் 40,47 முதல் 52, 57 முதல் 64 கவியரசு கண்ணதாசன் வணிக வளாக கடை எண்கள்.25,32 மற்றும் நவீன மீன்சந்தை தரைதளம் கடை எண்கள் 3,4,7 முதல் தளம் கடை எண்.1 ஆகிய கடைகளை மறு ஏலம் விட மன்றத்தின் அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.01/2020/அ3

**தீர்மானம் எண்.2540 அனுமதிக்கப்படுகிறது**

**பொருள் எண்.3**

தமிழகத்தில், கொரோனா நோய் தொற்று பரவுவதை கட்டுப்படுத்தும் நோக்கில், தமிழக அரசால் 10.05.2021 முதல் முழு உரடங்கு அமுல்படுத்தப்பட்டதை தொடர்ந்து, கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவரின் உத்தரவின்படி, நகராட்சி பேருந்து நிலையத்தில் மீன் மற்றும் இறைச்சி கடைகளை செயல்படுத்தும் பொருட்டு, 280’ x 10’ மற்றும் 250’ x 10’ அளவு கொண்ட தற்காலிக கூடாரங்களை (Temporary Shed) அனைத்து செலவுகள் உட்பட நாள் வாடகை அடிப்படையில் அமைக்கும் பணியினை, கொரோனா நோய் தடுப்பு பணிகளின் அவசர அவசியம் கருதி, நகராட்சி சட்டம் 1920 பிரிவு 15-ன் கீழ், அக்ஷயா பந்தல் அமைப்பு, கணேசபுரம் நிறுவனம் மூலம் மேற்கொண்டுள்ளதற்கும், 11.05.2021 முதல் 27.06.2021 வரை 48 நாட்களுக்கான செலவினம் ரூ.72,000/-ஐ கொரோனா நிதியிலிருந்து வழங்குவதற்கு மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.577-1/2021/எச்1

**தீர்மானம் எண்.2541 அனுமதிக்கப்படுகிறது**

பொருள் எண்.4

இந்நகராட்சி ஈப்பு வாகனம் TN 74 V 3530-ல் பழுதுகள் ஏற்பட்டு, வாகனத்தை இயக்குவதில் சிரமம் ஏற்பட்டதை தொடர்ந்து, அலுவலகப் பணிகளில் மேற்படி வாகனத்தின் முக்கியத்துவத்தை கருத்தில் கொண்டு, இன்ஜின் ஆயில், டீசல் பில்ட்டர்கள் புதிதாக மாற்றுதல், டயர்களின் Alignment, Balancing ஆகியவை சரி செய்தல் ஆகிய பணிகளை மேற்கொண்ட வகையில், அதற்கான செலவினம் ரூ.1875/- திரு.N.செல்வகுமார், ஓட்டுநரால் வழங்கப்பட்டுள்ளது எனவே மேற்படி தொகை ரூ.1875/-ஐ திரு.N.செல்வகுமார், ஓட்டுநருக்கு நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.5030/2010/இ1

**தீர்மானம் எண்.2542அனுமதிக்கப்படுகிறது**

பொருள் எண்.5

நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.26888/UGSS-2/2018-20 நாள் 15.11.2020-ன் படி, இந்நகராட்சிக்கு, கசடு கழிவு மேலாண்மை திட்டம்:2018-19-ன் கீழ், ரூ.548.35 இலட்சம் மதிப்பீட்டில் 40 KLD கொள்ளளவு கொண்ட கசடு கழிவு சுத்திகரிப்பு நிலையம் அமைப்பதற்கு நிதி ஒதுக்கீடு செய்து நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது. மேற்காணும் திட்டப்பணிக்கான மதிப்பீட்டிற்கு நகராட்சி நிர்வாக தலைமை பொறியாளரின் தொழில் நுட்ப அனுமதி பெற்று 08.02.2019-ல் திரு.டி.ஜஸ்டின் சுந்தர் சிங் ஒப்பந்ததாரருக்கு பணி உத்தரவு வழங்கப்பட்டது. மேற்படி பணிக்கான ஒப்பந்தகாலம் முடிவுற்று ஓர் ஆண்டிற்கு மேலாகி விட்ட நிலையில்,மண் நிரப்புதல் பணிக்கு தேவையான மண்ணை வாங்குவதில் சட்ட பிரச்சினைகள் ஏற்பட்டது மற்றும் திட்டப்பணியினை துரிதமாக மேற்கொள்ள கேட்டு ஒப்பந்ததாரருக்கு பலமுறை நேரிலும், தொலைபேசி வாயிலாகவும், கடிதம் மூலமாகவும் அறிவுறுத்தப்பட்ட போதிலும் அதற்கு எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ளாமல் ஒப்பந்ததாரர் கால தாமதம் ஏற்படுத்தி வந்த காரணங்களினால், மன்றத் தீர்மானம் எண்.2533 நாள் 21.06.2021-ன் படி, மேற்படி திட்டப்பணிக்கான பணி உத்தரவினை ரத்து செய்வதற்கு மன்ற ஒப்புதல் பெறப்பட்டு, நகராட்சி ஆணையர்(பொ) அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.566-1/2018/இ1 நாள் 23.06.2021-ன் படி,திரு.டி.ஜஸ்டின் சுந்தர் சிங் ஒப்பந்ததாரருக்கு வழங்கப்பட்ட பணி உத்தரவு ரத்து செய்யப்பட்டது.

கசடு கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்தல் தொடர்பாக நகராட்சி நிர்வாக ஆணையரால் 20.11.2020-ல் நடத்தப்பட்ட ஆய்வு கூட்ட நடவடிக்கைகளில் கசடு கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்தல் பணியினை Mechanical முறையில் செயல்படுத்த நடவடிக்கை மேற்கொண்டு 6 மாதத்திற்குள் முடிக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில், மேற்படி திட்டப்பணிக்காக உப்பளம் உரக்கிடங்கு பகுதியில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள இடத்தில், ரூ.400.00 இலட்சம் மதிப்பீட்டில் கசடு கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்தல் பணியினை Mechanical முறையில் மேற்கொள்வதற்கு திருத்திய நிர்வாக அனுமதி பெறும் பொருட்டு, நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு கருத்துரு சமர்ப்பிக்க மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.566-1/2018/இ1

**தீர்மானம் எண்.2543 அனுமதிக்கப்படுகிறது**

பொருள் எண்.6

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை செயல்முறைகள் ந.க.எண்.9691/J2/2021 நாள் 11.05.2021-ல் கொரோனா நோய் தொற்று, ஒரு பகுதி அல்லது ஒரு வாட்டில் ஒன்றுக்கும் அதிகமாக (3 Positive cases) இருந்தால், கட்டுப்படுத்தப்பட்ட பகுதியாக (Containment zone) அறிவித்து தடுப்புக்கள் (Parricading arrangements) அமைக்க தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில், இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில், கொரோனா நோய் தொற்று எண்ணிக்கையின் படி கட்டுப்படுத்தப்பட்ட பகுதியாக அறிவிக்கப்பட்ட இடங்களில், பணியின் அவசர அவசியம் கருதி தடுப்புக்கள் அமைக்கும் பணிகளை நகராட்சி சட்டம் 1920 பிரிவு 15-ன் கீழ் அக்ஷயா பந்தல் அமைப்பு, கணேசபுரம் நிறுவனம் மூலம் மேற்கொண்டுள்ளதற்கும், 20.05.2021 முதல் 24.06.2021 வரை 11 இடங்களில் தடுப்புக்கள் அமைப்பதற்கான செலவினம் ரூ.2,02,925/-ஐ கொரோனா நிதியிலிருந்து வழங்குவதற்கும் மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.577-2/2021/எச்1

**தீர்மானம் எண்.2544 அனுமதிக்கப்படுகிறது**

நகராட்சி பொறியாளர் / ஆணையர்(பொ)
குளச்சல் நகராட்சி